இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 23-06-2023

# மணிப்பூரில் பா.ஜ.க.வும் எரிகிறது!

அடுத்த கட்சிகளை அச்சுறுத்துவதிலேயே பா.ஜ.க. காலத்தை ஓட்டிக் கொண்டு இருக்கிறது. மணிப்பூரில் என்ன நடந்திருக்கிறது பார்த்தீர்களா? சொந்தக் கட்சி எம்.எல்.ஏ.க்களே பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பி இருக்கும் கேவலத்தைப் பார்க்கிறோம்!

பல மாதங்களாக எரிந்து கொண்டிருக்கிறது மணிப்பூர். பெரும்பான்மை மைத்தி சமூகத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தது பா.ஜ.க. அரசு. இதற்கு குகி சமூக மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். கடந்த மே மாதம் 3 ஆம் தேதி எரியத் தொடங்கியது மணிப்பூர், இன்னமும் அணையவில்லை நெருப்பு. அதனை அடக்குவதற்கு ஆளும் மாநில பா.ஜ.க. அரசாலும் முடியவில்லை. ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வின் அரசாலும் முடியவில்லை. 'யாராக இருந்தாலும் தாக்கித் தகர்த்துவிடுவார்' என்று பூதாகரம் காட்டும் அமித்ஷாவாலும் முடியவில்லை.

இதுவரை 150 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளார்கள். அந்த மாநிலத்தை விட்டு 50 ஆயிரம் பேர்வெளியேறிவிட்டார்கள். 2000 கடைகள் இதுவரை எரிக்கப்பட்டுள்ளன. 5000 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. இணைய தள சேவை முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வழிபாட்டுத் தலங்கள் எரிக்கப்பட்டுள்ளன. காவல் துறை அதிகாரி ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார். பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்களின் வீடுகள் தாக்கப்படுகின்றன. 11 மாவட்டங்களில் 144 தடையுத்தரவு போடப்பட்டுள்ளது.

ரைபிள் படைப்பிரிவின் ஆயுதக் கிடங்கில் புகுந்து துப்பாக்கிகளை கொள்ளையடித்துப் போய்விட்டார்கள். 'துப்பாக்கியைக் கொண்டு வந்து கொடுத்துவிடுங்கள்' என்று அவர்களுக்கு அன்பான அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. ஆட்சி.

மணிப்பூர் காவல் துறை இருக்கிறது. மத்திய ஆயுதப் படை போலீஸ் வந்துள்ளது. அசாம் ரைபிள் படையும், இந்திய ராணுவமும் வரவழைக்கப்பட்டுள்ளன. யாராலும் அடக்க முடியவில்லை போராட்டங்களை. எனவேதான் ஆளும் பா.ஜ.க. அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டதாக பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒன்பது எம்.எல்.ஏ.க்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார்கள்.

- ★ கரம்ஷியாம் சிங்
- ★ தோக்சோம் ராதே ஷியாம் சிங்
- ★ நிஷி கண்ட் சிங் சபம்
- ★ குவைராக்பம் ரகுமணி சிங்
- ★ பிரோஜன் சிங்
- ★ டி.ரபிந்ரோ சிங்
- ★ எஸ்.ரஜேன் சிங்
- ★ எஸ்.கேபி தேவி
- ★ ஒய்.ராதே ஷ்யாம் - ஆகிய ஒன்பது பா.ஜ.க. உறுப்பினர்கள் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள்.
- ★ பா.ஜ.க. அரசு மீதும், நிர்வாகத்தின் மீதும் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுக்க சிறப்பான நடவடிக்கையை உடனடியாக எடுத்தாக வேண்டும்.
- ★ மைத்தி மற்றும் குகி இனத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- ★ அமைதியை நிலைநாட்டுவதற்கு மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான பாதுகாப்புப் படைகளை நிறுத்த வேண்டும்.
- ★ மாநிலத்தின் ஒருமைப்பாட்டில் எந்தவிதமான சமரசமும் செய்யக் கூடாது.
- ★ குறிப்பிட்ட சமூகத்துக்கான தனிநிர்வாகம் என்ற வேண்டுகோள் எக்காரணத்துக்காகவும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. - என்ற ஐந்துகோரிக்கைகளைபா.ஜ.க.எம்.எல்.ஏ.க்கள்வைத்துள்ளார்கள்.

முதல்வர் பிரேன் சிங்க்கு ஆதரவான மைத்தி சமூகத்தைச் சேர்ந்த பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை சந்தித்த அதே நாளில்தான் இந்த ஒன்பது பா.ஜ.க. எம்,.எல்.ஏ.க்கள் இந்தக் கடிதத்தை பிரதமருக்குக் கொடுத்துள்ளார்கள். பா.ஜ.க. அரசின் மீதான விமர்சனமாக மட்டுமல்ல, மணிப்பூர் பா.ஜ.க.வே இரண்டாக உடைந்து நிற்பதை இந்தக் கடிதம் காட்டுகிறது. மணிப்பூர் முதலமைச்சரின் அரசியல் ஆலோசகராக பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான தோக்சோம் ராதேஷ்யாம் சிங் இருந்தார். அவரும் பதவி விலகிவிட்டார். மணிப்பூர் சுற்றுலா கழகத் தலைவர் பதவியில் இருந்து இன்னொரு பா.ஜ.க. எம்.எல்.ஏ.வும் விலகிவிட்டார். 60 உறுப்பினர்கள் கொண்ட மணிப்பூர் சட்டமன்றத்தில் பா.ஜ.க.வின் பலம் என்பது 32. அதில் 9 உறுப்பினர்கள் இப்போது எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். இதனால் பலம் என்பதே 23தான். பெரும்பான்மையை இழக்கத் தொடங்கி இருக்கிறது மணிப்பூர் பா.ஜ.க. அரசு.

மணிப்பூரைச் சேர்ந்த பத்து கட்சிகளின் தலைவர்கள் டெல்லி வந்தார்கள். அவர்களை பிரதமர் சந்திக்கவில்லை. பத்து நாட்களாகக் காத்திருந்தார்கள். அழைப்பு வரவில்லை. பத்து நாட்களாக அவர்கள் டெல்லியிலேயே காத்திருக்கிறார்கள். மணிப்பூர் பற்றி எரியும் போது அமெரிக்கா போய்விட்டார் பிரதமர் மோடி. உக்ரைன் பிரச்சினையை இவரால்தான் தீர்க்க முடியும் என்பார்கள். உள்ளூர் பிரச்சினையையே தீர்க்க முடியவில்லை.

**முடிவெடுக்க முடியாமல் பா.ஜ.க. திணறி வருவதை மார்க்சிஸ்ட் தலைவர் சீத்தாராம் யெச்சூரி சுட்டிக் காட்டி இருக்கிறார். "மணிப்பூரில் ஆளும் பா.ஜ.க.வின் இரண்டு அமைச்சர்கள் உட்பட 10 சட்டமன்ற உறுப்பினர்கள் குகி இனத்தைச் சேர்ந்தவர்கள். குகிகளுக்கு என்று தனியாக மாநில நிர்வாகத்தை உருவாக்க வேண்டும் என்று பேசுகிறார்கள். ஆனால் இங்கு வந்த உள்துறை அமைச்சர் அமித்ஷா, மணிப்பூர் ஒருங்கிணைந்த மாநிலமாக நீடிக்கும் என்கிறார். மாநில பா.ஜ.க. அரசு ஒரு விதமாகவும், ஒன்றிய பா.ஜ.க. அரசு வேறு விதமாகவும் பேசுகிறது. மக்களைக் குழப்பி வன்முறையை அதிகமாக்கி வருகிறது. இதுதான் பா.ஜ.க.வின் இரட்டை என்ஜின் ஆட்சி. இரண்டு என்ஜின்களும் முரண்பட்ட திசையில் செல்கின்றன" என்கிறார் யெச்சூரி.**

இரண்டு என்ஜின்கள் இருந்தாலும் வண்டி ஓடவில்லை. ஆட்கள் தள்ள வேண்டிய நிலைமையில்தான் இருக்கிறது என்பதே மணிப்பூர் மாநில ஆட்சி நிலைமையும், ஒன்றிய ஆட்சியின் நிலைமையும்!



பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, பீகார் முதல்வர் நிதிஷ்குமார் வரவேற்றார். அப்போது அவர்களுக்கு சால்வை அணிவித்தும், புத்தகம் பரிசளித்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பித்தார்.

பீகார் மாநிலம் பாட்னாவிற்கு வருகை புரிந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பீகார் மாநில துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் மற்றும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பீகார் அரசின் உயர் அதிகாரிகள் வரவேற்றனர். கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு உடன் இருந்தார்.







பாட்னாவிற்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பீகார் தமிழ் சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் அங்குள்ள தமிழ்நாட்டின் ஐ.ஏ.எஸ். மற்றும் உயர் அதிகாரிகள் புத்தர் சிலை உள்ளிட்ட நினைவுப் பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர்.

## வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தில் பங்கேற்க ஆவலாக உள்ளேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

**பாட்னா, ஜூன் 23-**

**பீகார் மாநிலம் பாட்னா சென்றுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தனது ட்விட்டர் பதிவில், வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தில் பங்கேற்க ஆவலாக உள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு : -

பாட்னாவில் நான் தங்கியுள்ள அரசு இல்லத்திற்கு பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் வருகை தந்து சந்தித்தார். நான் லாலு பிரசாத் யாதவ் அவர்களது இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்து நலம் விசாரித்தேன். பீகார் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் என்னை வரவேற்றார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தில் பங்கேற்க ஆவலாக இருக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## சென்னையில் உலகத்தரம் வாய்ந்த
# கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு அரங்கம்!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் – அமைச்சர், அதிகாரிகளுடன் ஆலோசனை!

**சென்னை, ஜூன் 23-**

**சென்னையில் உலகத்தரம் வாய்ந்த "கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு அரங்கம்" அமைப்பது குறித்து அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று ஆலோசனை நடத்தினார்.**

அதன் விபரம் வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2.6.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு உரையாற்றினார்.

அப்போது முதல்வர் அவர்கள் தமது உரையில், "நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தலைவர் கலைஞரின் நூற்றாண்டு தொடங்குவதை ஒட்டி, அவருடைய புகழுக்கு மேலும் மேலும் புகழ் சேர்க்கும் வகையில், ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

**தலைநகர் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும்.**

உலகளவில் உள்ள கூட்ட அரங்கங்களில் மகத்தான "BEST IN CLASS" Convention Center ஆக இது அமைய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உலகளாவிய தொழில் கண்காட்சிகள், வர்த்தக மாநாடுகள், தொழில்நுட்பக் கூட்டங்கள், உலக நிறுவனங்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், உலகத் திரைப்பட விழாக்கள் போன்றவை நடக்கும் இடமாகக் 'கலைஞர் Convention Centre' அமைய வேண்டும் என எண்ணுகிறேன். இது, சிங்கப்பூர், ஜப்பான் பயணத்தின்போது எனக்கு ஏற்பட்ட எண்ணம்!

மிகப்பெரிய Convention Centreகள் உலகின் பல நாடுகளில் இருப்பதுபோல தமிழ்நாட்டில் - சென்னையில் இருக்கிறது, அதுவும் கலைஞர் பெயரால் இருக்கிறது என்பதுதான் மாபெரும் பெருமையாக இருக்கும். Convention Centre போன்ற பயன்பாட்டுச் சின்னங்கள் கலைஞர் புகழை நூற்றாண்டுகள் கடந்தும் உலகமெங்கும் எடுத்துச் செல்லும்.

**நட்சத்திரத் தரத்தில் தங்கும் விடுதிகள்!**

ஏற்கனவே, தற்போது சென்னை நந்தம் பாக்கத்தில் 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் வர்த்தக மையம் அமைந்திருந்தாலும், கூடுதலாகக் கட்டப்பட்டு வரும் வர்த்தக மையம் சுமார் 12 ஆயிரம் சதுர மீட்டர் அளவில் அது இருந்தாலும், இது வளர்ந்து வரும் தேவைக்கும், எதிர்காலத் தேவைக்கும் போதுமானதாக இல்லை. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அமையவுள்ள இந்த 'கலைஞர் Convention Centre' சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் 5 ஆயிரம் நபர்கள் அமரக்கூடிய உலகத்தரத்திலான மாநாட்டு அரங்கம், கண்காட்சி அரங்கங்கள், நட்சத்திரத் தரத்திலான தங்கும் விடுதிகள், உணவகங்கள், ஊடக அரங்கங்கள், பூங்காக்கள், பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கி மிகப் பிரம்மாண்டமாக உலகத் தரத்தில் சென்னையில் அமைக்கப்படும் என்பதை பெருமையோடும் - மகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**காலமெல்லாம் கலைஞர் வாழ்வார்!**

'கலைஞர் convention centre' என்பது தமிழ்நாட்டு இளைய சக்தியை - அறிவு சக்தியை பூமிப்பந்தில் உள்ள அனைத்து இடங்களுக்கும் அழைத்துச் செல்வதாக அமையும்.

'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் மூலமாகப் பயிற்சி பெற்று வரும் இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மாணவர்களுடைய, இளைஞர்களுடைய அறிவுக் குடியிருப்பாக 'கலைஞர் 'convention centre' அமையுமானால் காலமெல்லாம் கலைஞர் வாழ்வார்! அதுவே நம்மை ஆளாக்கிய தலைவருக்கு நாம் செய்யக்கூடிய சிறப்பான, உண்மையான புகழாக இருக்கும்" -

- என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில் நேற்று, தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டையொட்டி சென்னையில் உலகத்தரம் வாய்ந்த "கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு அரங்கம்" அமைப்பது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் மணிவாசன், நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் சந்தரமோகன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.